**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

பொருள் எண்.1

சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் கடையநல்லூர் நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளை ஏற்று நடத்திட நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் திரு.A.வெங்கடேஷ் CMS1283/1998 என்பவரை நியமிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்கண்ட சட்ட அலுவலரை கடையநல்லூர் நகர்மன்ற வழக்கறிஞராக (உயர்நீதி மன்றத்தில்) நியமனம் செய்திட மன்ற முடிவு செய்ய வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. கடையநல்லூர் நகராட்சிக்கு திரான சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்படும் வழக்குகளை ஏற்று நடத்திட திரு.A.வெங்கடேஷ் என்பவரை கடையநல்லூர் நகர் மன்ற வழக்கறிஞராக (Standing Council) நியமனம் செய்ய அனுமதிக்கலாம்.
2. நடைமுறையில் உள்ள அரசாணையின்படி மேற்படி சட்ட அலுவலருக்கு மதிப்பூதியம் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கலாம்,

(ந.க.எண்.5480/2021/இ1)

**தீர்மான எண். 630**

அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ப.ஸ்டேன்லி ஜெபசிங்,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்(பொ),
கடையநல்லூர் நகராட்சி.